Registered as a Newspaper

பக்கங்கள் – 12
விலை – ரூபா 50


# உதயன்

சுடர் : 39
கதிர் : 181

சனிக்கிழமை
25 மே 2024

வைகாசி 12 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

முச்சந்தி முரளி



"கெட்டிக்காரன் புளுகு எட்டு நாளைக்குத்தான் நிலைக்கும் பாருங்கோ"

தமிழ் மக்கள் நிராகரிக்கும்

# உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதில் அரசு உறுதியாகவுள்ளது

## யாழ். மண்ணில் வைத்து ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



**யாழ்ப்பாணம், மே 25**

**பாதிக்கப்பட்ட தமிழ் மக்களும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளும் நிராகரித்த உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை அரசாங்கம் உருவாக்குவதில் உறுதியாக இருப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் வைத்து நேற்றுத் தெரிவித்தார்.**

11

2005 இல் தேர்தல் புறக்கணிப்புக்காக

## தமிழர்கள் இப்போது வருந்துகிறார்களாம்

ரணில் முன்பாக சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 25
2005ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலை தமிழ் மக்கள் புறக்கணித்தமையை இப்போதாவது வருத்தத்துடன் நினைவுகூர்வார்கள் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க

08

## யாழ். போதனா மருத்துவமனை தேசிய மருத்துவமனையாகும்

ரணில் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம், மே 25
வடமாகாணத்தில் உயர்தர சுகாதார சேவையை உறுதி செய்யும் வகையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை விரைவில் தேசிய மருத்துவமனையாக மாற்றப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

11

## விடுவிக்கக் கூடிய காணிகளை யாழ்ப்பாணத்தில் விடுவிப்போம்

காணி உறுதி வழங்கும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 25
யாழ்ப்பாணத்தின் உயர்பாதுகாப்பு வலயம் மிகப்பெரியளவில் குறைக்கப்பட்டுள்ளது. விசேட ஆய்வுகளின் பின்னர் மேலும் விடுவிக்கப்படக்கூடிய காணிகளை விடுவிக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

08

## மீன்பிடிக்கச்சென்ற இருவரைக் காணவில்லை

திருகோணமலை, மே 25
திருகோணமலை, சல்லிக்கடற்கரையிலிருந்து கடந்த 21ஆம் திகதி மீன்பிடிக்காக கடலுக்குச் சென்ற இரண்டு மீனவர்கள் இதுவரை கரைதிரும்பவில்லை.

08

## ஊடகவியலாளர்களை அச்சுறுத்திய பொலிஸார்

யாழ்ப்பாணம், மே 25
சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட ,தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபட்டோரையும், ஊடகவியலாளர்களையும் அங்கிருந்த பொலிஸார் அலைபேசியில் ஒளிப்படம் எடுத்து அச்சுறுத்தும் விதத்தில் செயற்பட்டுள்ளனர்.

11

## கெமுனு விகாரையில் பிரித் ஓதச் செல்லுங்கள்!

தமிழ்ப் பொலிஸாருக்கு கட்டாய உத்தரவு!

யாழ்ப்பாணம், மே 25
காங்கேசன்துறை கெமுனு விகாரையில் வழிபாடுகளை மேற்கொள்வதற்கு தமிழ்ப் பொலிஸார் நேற்று நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

08

சண்டையை விலக்கச் சென்றதால் விபரீதம்

## கத்திக்குத்தில் இளைஞன் சாவு!

யாழ்ப்பாணம், மே 25
அக்காவின் கணவனுக்கும், தந்தைக்கும் இடையிலான முரண்பாட்டை விலக்கச் சென்ற இளைஞரொருவர் , அக்காவின் கணவரால் கத்திக்குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளாரென சுன்னாகம் பொலிஸார் தெரிவித்தனர்.

08

ஒஸ்லோ அறிக்கை விவகாரம்

## இரா.சம்பந்தனின் திரிபுபடுத்தலை தெளிவுபடுத்தினார் உருத்திரகுமாரன்

யாழ்ப்பாணம், மே 25
தமிழ்ப்பொதுவேட்பாளர் விடயத்தை எதிர்ப்பதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் ஒஸ்லோ அறிக்கை தொடர்பான விடயத்தை திரிபுபடுத்தியுள்ளதாகத் தெரிவித்து அது தொடர்பான தெளிவுபடுத்தலை நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் வி.உருத்திரகுமாரன் வழங்கியுள்ளார்.

08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத முறைகளில் போராட்டம் செய்யாதீர்!

## பேராதனைப் பல்கலையின் பீடாதிபதி கோரிக்கை

கொழும்பு, மே 25

**பயங்கரவாத நடவடிக்கைகள் போன்ற போராட்ட முறைகளை மேற்கொள்வதைத் தவிர்க்க வேண்டும் என்று பேராதனைப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் பீடாதிபதி கலாநிதி பிரபாத் ஏகநாயக்க வலியுறுத்தியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:- கல்விசாரா ஊழியர்கள் தமது தொழில் உரிமைகளை வென்றெடுப்பதற்காக செயற்படுவதில் எவ்வித பிரச்சினையும் இல்லை. ஆனால், கல்விக் கடமைகளுக்கு இடையூறு விளைவித்தால் அதனை அங்கீகரிக்கமுடியாது.

பல்கலைக்கழகத்தின் இணைய வசதிகள் துண்டிக்கப்பட்டுள்ளதால், விரிவுரையாளர்கள், தங்களின் தனிப்பட்ட பணத்தைச் செலவழித்து, ஒன்லைன் முறையின் மூலம் மாணவர்களுக்கு கற்பிக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் தண்ணீர் மற்றும் மின்சாரத்தைத் துண்டிக்கப்போவதாக அச்சுறுத்தல் விடுக்கக்கூடும்.

போராட்டங்களை நடத்த அனைவருக்கும் உரிமையுண்டு. ஆனால், இவ்வாறான செயற்பாடுகளையும் அத்துமீறல்களையும் மேற்கொள்ளக்கூடாது - என்றார். (ச-இ)

## ரயிலுடன் விபத்து; மூவர் உயிரிழப்பு

கொழும்பு, மே 25

மோட்டார் சைக்கிளில் பயணித்த மூவர் ரயிலுடன் மோதுண்டு உயிரிழந்துள்ளனர்.

காலி - பிந்தலிய ரயில் கடவையில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து நேர்ந்துள்ளது. 17 வயதுச் சிறுவன் ஒருவனும், 19 வயதுடைய இளைஞர்கள் இருவருமாக மூவரே உயிரிழந்துள்ளனர்.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

## பொதுமன்னிப்பு

யாழ்ப்பாணம், மே 25

வெசாக்தினத்தை முன்னிட்டு, யாழ்ப்பாணம் சிறைச்சாலையிலிருந்து பெண் கைதி உட்பட 4 கைதிகள் பொதுமன்னிப்பின்கீழ் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் சிறுகுற்றம் புரிந்து தண்டப்பணம் செலுத்தமுடியாத நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். தற்போது ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின்கீழ் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ப-23)


## கசிப்புடன் பெண் கைது



யாழ்ப்பாணம், மே 25

கோப்பாய், செல்வபுரம் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருந்த பெண்ணொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ். மாவட்டப் பொலிஸ் புலனாய்வு பிரிவினர் நேற்று வெள்ளிக்கிழமை மேற்கொண்ட சோதனை நடவடிக்கையில் அவர் கைதுசெய்யப்பட்டார். அவரிடமிருந்து 3 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ள நிலையில், சந்தேகநபருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. (ச-26)



யாழ். கோப்பாய்ப் பிரதேச அரசினர் மருத்துவமனையை, ஆதார மருத்துவமனையாகத் தரமுயர்த்துவதற்காக, கோப்பாய் மத்தி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர், கோப்பாய்ப் பிரதேச அரசினர் மருத்துவமனை நோயாளர் நலன்புரிச்சங்க உறுப்பினர்கள் இணைந்து, வட மாகாண ஆளுநரிடம் மனு கையளித்துள்ளனர். (ப-125)

## பனை முறிந்து வீட்டுக்குச் சேதம்



யாழ்ப்பாணம், மே 25

யாழ்ப்பாணம் - கொக்குவில் மேற்குப் பகுதியில் பனைமரமொன்று வீட்டின் மீது முறிந்து வீழ்ந்தமையால் வீடு சேதமடைந்துள்ளது. கடும் காற்றுக் காரணமாகவே இந்த அசம்பாவிதம் ஏற்பட்டுள்ளது. இதேவேளை- கடும் காற்றுக் காரணமாக கொக்குவில் பகுதியைச் சேர்ந்த இரண்டு குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-66)

குஜராத்தில் கைதானோருடன் தொடர்பு

## இலங்கையில் ஒருவர் ரி.ஐ.டி.யினரால் கைது



புதுடில்லி, மே 25

குஜராத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ள இலங்கையர்களுடன் தொடர்புபட்டவர் என்ற சந்தேகத்தில் இலங்கையிலும் ஒருவர் பயங்கரவாத விசாரணைப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் அஹமதாபாத்தில் வைத்து கடந்த 19ஆம் திகதி நான்கு இலங்கையர்கள் கைதுசெய்யப்பட்டனர். அவர்கள் நால்வரும் ஐ.எஸ்.ஐ.எஸ். பயங்கரவாதக் குழுவைச் சேர்ந்தவர்கள் என்பதும், இந்தியாவில் தற்கொலைத் தாக்குதல்களை நடத்துவதற்காகப் பாகிஸ்தானில் இருந்து வரவேண்டிய உத்தரவுக்காகக் காத்திருந்தனர் என்பதும் விசாரணைகளில் தெரியவந்ததாக இந்தியப் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

இந்தநிலையிலேயே, அவர்களுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில் இலங்கையிலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ம)

UN WFP

## உணவுப் பாதுகாப்பின்மை மலையகத்தில் அதிகரிப்பு

### உலக உணவுத் திட்டம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 25

இலங்கையின் பெருந்தோட்டப் பகுதிகளில் உணவு பாதுகாப்பின்மை அதிகரித்துள்ளது - என்று உலக உணவுத் திட்டம் தனது மதிப்பீட்டு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இலங்கையின் 2019ஆம் ஆண்டு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளைத் தொடர்ந்து, உணவுப் பாதுகாப்பின்மை நாட்டில் தீவிரமாகியிருந்தது. இலங்கையின் நிலைமைகள் தொடர்பில் உலக உணவுத் திட்டம் அவ்வப்போது சிறப்பு அறிக்கைகளை முன்வைத்துத் தெளிவுபடுத்தி வருகின்றது.

இந்த நிலையிலேயே, பெருந்தோட்டப் பகுதிகளில் தற்போது உணவுப் பாதுகாப்பின்மை அதிகரித்துள்ளது என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் பெருந்தோட்டங்களில் 24 வீத குடும்பங்கள் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்கொண்டிருந்தன. ஆண் தலைமைத்துவக் குடும்பங்களில் 23 வீதமாகவும், பெண் தலைமைத்துவக் குடும்பங்களில் 32 வீதமாகவும் உணவுப் பாதுகாப்பின்மை பதிவாகியுள்ளது.

தற்போது நிலைமைகள் சுமுகமடைவதாகத் தெரிவிக்கப்படுகின்றபோதிலும் மலையகத்தில் இந்த நிலைமை நீடிக்கின்றது என்று அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வெசாக் பௌர்ணமி தினத்தில்

# திஸ்ஸ விகாரைக்கு எதிராகப் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 25

**தையிட்டியில் சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள திஸ்ஸ விகாரைக்கு எதிராகவும், அதனைச் சுற்றியுள்ள தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தியும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மேற்கொண்ட போராட்டம் நேற்று முன்தினமும் தொடர்ந்தது.**

தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு அருகில் ஆரம்பமான தொடர் காணி விடுவிப்புப் போராட்டம் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

வெசாக் பௌர்ணமி தினமான நேற்றுமுன்தினம் மாலை திஸ்ஸ விகாரையில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. வெசாக்கை முன்னிட்டு விகாரை வளாகம் மற்றும் அதனை அண்டியுள்ள பகுதிகள் வெசாக் கூடுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இந்த நிலையிலேயே, மேற்படி விகாரைக்கு எதிராக முன்னணியினரால் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், கட்சியின் தேசிய அமைப்பாளர் ப.சுரேஷ், கட்சியின் ஊடகப் பேச்சாளர் சட்டத்தரணி க.சுகாஷ், கட்சியின் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் என 50க்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர். (ம-66)

## பேருந்து விபத்தில் இருவருக்குக் காயம்

யாழ்ப்பாணம், மே 25

சுற்றுலா சொகுசுப் பேருந்தும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்து உரும்பிராய் சந்தியில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. கோப்பாயைச் சேர்ந்த இருவரே படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-125)



## மான்கொம்பு கடத்தல்: ஒருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், மே 25

மான்கொம்மை கடத்திவந்த நபரொருவர் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்தில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து இந்த மான் கொம்பு கடத்திவரப்பட்டுள்ளது. கைதானவர் யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் பாரப்படுத்தப்பட்டார். (ம-26)

## இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 50,000 போதை மாத்திரைகள் மீட்பு!

சென்னை, மே 25

தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்குக் கடத்துவதற்காக வைக்கப்பட்டிருந்த ஒருதொகை போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன.



வேதாளை பகுதியில் சொகுசுக் கார் ஒன்றில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே, மேற்படி போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன என்று தமிழக பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சந்தேகநபர் தப்பியோடிய நிலையில் அவரைக் கைதுசெய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ம-100)

# ஜனாதிபதி ரணிலுக்கு எதிர்ப்பு: பல்கலையில் கறுப்புக்கொடி!

யாழ்ப்பாணம், மே 25

ஜனாதிபதி ரணிலின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நேற்று கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.




பல்கலைக்கழக கல்விசாரா உழியர்களின் பிரச்சினைகள் மற்றும் கோரிக்கைகளுக்குத் தீர்வு வழங்கப்படாமல் இழுத்தடிப்பதைக் கண்டித்தே மேற்படி கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. (ம-125-66)

## புதினம் தெரியுமோ?

**நாய் வேசம் போட்டால் குரைக்கத்தான் வேணும். அதுக்காக பொலிஸ் உடுப்புப் போட்டால் புத்தரைக் கும்பிட வேணுமெண்டு கட்டாயமில்லைத்தானே. ஆனால், காங்கேசன்துறை பொலிஸ் ஏரியாக்குள்ள வேலை செய்யிற எல்லாத் தமிழ்ப் பொலிஸ்காரரையும் கட்டாயம் காங்கேசன்துறை கெமுனு விகாரைக்கு சிவில் உடுப்பில வரச்சொல்லி மேலிடத்தில இருந்து ஓர்டர் வந்திருக்கு. மேலிடத்து உத்தரவெண்டதால எல்லாத் தமிழ்ப் பொலிஸ்காரரும் சிவில் உடுப்போட அங்க போயிருக்கினம். ஏற்கனவே முன்னணிக் காரர் தையிட்டியில ஆர்ப்பாட்டம் செய்யிறதால, அவையை கைது செய்யிறதுக்காகவோ, இல்லாட்டி அவையோட சேர்ந்து நிக்கிற மாதிரி நிண்டு தகவல் அறியிறதுக்காகவோ தான் இப்பிடி சிவில் உடுப்போட விகாரைக்குப் போகச் சொல்லி இருக்கினம் எண்டு அவை முதலில நினைச்சிருக்கினம். ஆனால் அங்க போனபிறகு தான், காங்கேசன்துறை கெமுனு விகாரை புத்தரைக் கும்பிடத்தான் தங்களை சிவில் உடுப்பில வரச் சொல்லி இருக்கினம் எண்டு தமிழ்ப் பொலிஸ்காரருக்கு விளங்கி இருக்கு. வேண்டா வெறுப்பா'புத்தருக்கு அரோகரா'எண்டு கும்பிட்டுட்டுத்தான் வந்தவையாம்.**

**என்னதான் இந்த நாட்டில பௌத்தத்துக்கு முன்னுரிமை குடுத்தாலும்,ஒருத்தர் என்ன மதத்தைப்பின்பற்ற வேணும், எந்தக் கடவுளைக் கும்பிட வேணும் எண்ட மதச் சுதந்திரம் ஒவ்வொருத்தருக்கும் இருக்கும். பொலிஸ் எண்டாப் போல அவை யொண்டும் அரசாங்கத்தின்ர அடிமையள் இல்லை. அடிமையளைக் கூட 'இந்தக் கடவுளைத்தான் கும்பிட வேணும்' எண்டு பலாத்காரம் செய்ய ஏலாது. பார்க்கப் போனால், சிங்கள அரசாங்கம் தமிழ்ப் பொலிஸ்காரரை அடிமையளை விடவும் கேவலமாத்தான் பாக்குது போல. இல்லாட்டி கெமுனு விகாரைக்குப்போய் புத்தரைக் கும்பிட வேணும் எண்டு என் னெண்டு ஓர்டர் போடமுடியும்? இத்தனைக்கும் அந்தப் புத்தவிகாரையை சட்டவி ரோதமா, கோயில்காணியைப் பிடிச்சு, ஒரு அனுமதியுமில்லாமல் அடாத்தாக் கட்டியிருக்கு. அப்பிடி அடாத்தாக் கட்டின ஒரு சட்டவிரோத விகா ரைக்கு சட்டத்தைக் காக்கவேண்டிய பொலிஸ் காரரைக் கட்டாயப்படுத்திக் கும்பிட அனுப்பிறதும் சட்டவிரோதம் தானே?**

**ஏற்கனவே சிங்கள ஏரியாக்களில இருந்து பஸ்களில ஆக்களை ஏத்தியந்து புத்தருக்குப் பூசை வைச்சுக் களைச்சுப் போட்டினம் போல. புத்தரைக் கும்பிடக் கூட்டியாறதுக்கும் கூலி குடுக்கத்தானே வேணும்.எவ்வளவுநாள் தான் இப்பிடி கூலிக்கு மாரடிக்கிற ஆக்களைக் கூட்டியர ஏலும், அதால தான் கூலியில்லாம கும்பிடுறதுக்கு தமிழ்ப் பொலிஸ் காரரைப் பிடிச்சிருக்கினம் போல. புத்தருக்கு வைகாசிப் பறுவத்தில புத்தி வந்தாலும், அவரைக் கட்டாயப்படுத்திக் கும்பிட வைக்கிற உந்தப் புதருகளுக்கு கடைசிவரைக்கும் நல்ல புத்தி வராது போல.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
10.09.1989

மறைவு
20.05.2024

## தியாகராசா தயானன்

(Bala Enterprises, Ganeswaram Alaveddy - உரிமையாளர்),
அகில இலங்கை சமாதான நீதவான்)

அளவெட்டி கணேஸ்வரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தியாகராசா தயானன் கடந்த 20.05.2024 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் தியாகராசா - பாலரஞ்சினி (சுவிஸ் - Rhainfelden)தம்பதியரின் அன்பு மகனும், கதிரமலை-ஞானேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், சிந்துஷாவின் (சித்த மருத்துவர் - உருத்திரபுரம்) அன்புக் கணவரும் அஸ்வந், அஸ்திரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான செல்லர் - பாக்கியம், கதிரித்தம்பி - பூரணம் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ஆறுமுகதாஸ் (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) மற்றும் ரூபரஞ்சினி ஆகியோரின் அன்புப் பெறாமகனும், காலஞ்சென்றவர்களான மனோன்மணி, இரத்தினம்மா, சுகிர்தலட்சுமி மற்றும் சற்குணதேவி (கன்டா), பத்மநாதன், சிவயோகநாதன் ஆகியோரின் அன்பு மருமகனும், கஜமாலினி, கதிவாணி, காலஞ்சென்ற கதீபன் மற்றும் சிந்துஜன் ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரனும், மகேஸ்வரன், தனபாலசிங்கம், இராசநாதன், யோகநாதன், இந்திரன், இராசலட்சுமி, விஜயலட்சுமி, ஜெயராணி, இராஜேஸ்வரி, ஜெகதீஸ்வரி, தர்மகுலசிங்கம், பரமேஸ்வரலிங்கம், இராசலிங்கம், சாந்தினி, ரஞ்சினி, சிவபாலன், சிவரஞ்சினி, ஜீவரஞ்சினி, கவிதா, சிவநாதன், இராசநாதன், ஜீவன் (கனடா), சண்முகராசா, பிரதீபன், நித்தியா ஆகியோரின் அன்பு மைத்துனரும், கஜானியின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி
கணேஸ்வரம்.

தகவல்:
குடும்பத்தினர்.




# இறுதிக்குள் சென்றது சன்ரைஸஸ் மீண்டும் கொல்கத்தாவுடன் மோதல்

ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை வீழ்த்தி இறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றது சன்ரைஸஸ். இறுதி ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை எதிர்த்து ஆடவுள்ளது.

சென்னையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ராஜஸ்தான் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று களத்தடுப்பை தேர்வு செய்தது. சன்ரைஸஸ் அணிக்கு ஒருபுறம் இலக்குகள் வீழ்ந்து கொண்டிருந்தாலும் அதிரடியை அந்த அணி கைவிடவில்லை. பந்து வீச்சில் ராஜஸ்தானின் கை ஓங்குவதும், அதிரடியில் சன்ரைஸஸ் மீண்டும் எழுவதுமாக அமைந்தது. 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றது. 34 பந்துகளில் 50 ஓட்டங்களை ஹென்றிச் காளிசன் பெற்றுக்கொடுத்தார். பந்து வீச்சில் ஆவேஸ் கான் மற்றும் போல்ட் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினர்.

இலகுவான இலக்கை விரட்ட ஆரம்பித்த ராஜஸ்தான் அணியின் பக்கமே ஆட்டம் இருந்தது. ஜெய்ஸ்வாலின் இலக்கு சரிக்கப்பட்ட பின்னர் அடுத்தடுத்து ராஜஸ்தான் வீரர்கள் ஆட்டமிழக்க சன்ரைஸஸ் பக்கம் ஆட்டம் திரும்பியது. துருவ் ஜுரல் தனித்து நின்று கடைசி வரையில் ஆடியபோதும் ஆட்டத்தை மீட்கமுடியவில்லை. 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 7 இலக்குகளை இழந்து 139 ஓட்டங்களைப்பெற்று 36 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. பந்து வீச்சில் இம்பக்ட் பிளேயராக வந்த சப்ராஸ் அஹமட் 3 இலக்குகளைக் கைப்பற்றி சன்ரைஸஸின் வெற்றிக்கு வழிகோலினார். (ஒ-5)

## காற்றால் மரம் முறிவு: மதில் பலத்த சேதம்

நேற்று வீசிய பலத்த காற்றுக் காரணமாக வீட்டு மதில் மீது வேப்பமரம் முறிந்து விழுந்ததால் மதில் சேதமாகியுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட இடர் முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரித்துள்ளார். திருநெல்வேலி மேற்கு கிராமஅலுவலர் பிரிவிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(அ-ஒ-27)

## வடமாகாண மீனவர் பிரச்சினை யாழில் இன்று கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 25

வடமாகாணக் கடற்றொழிலாளர் இணையத்தினரின் ஏற்பாட்டில், வடமாகாணத்திலுள்ள மீனவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினை மற்றும் அரசினால் கொண்டுவரப்படவுள்ள புதிய மீன்பிடிச் சட்டவரைவு சம்பந்தமான கலந்துரையாடல் யாழ். ரில்கோ விருந்தினர் விடுதியில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வடமாகாணக் கடற்றொழிலாளர் இணைய நிர்வாகத்தினரும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தினரும் இணைந்து யாழ். மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடலில் ஈடுபடவுள்ளதாகவும், இதற்காக யாழ். மற்றும் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு நேரடி அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் வடமாகாணக் கடற்றொழிலாளர் இணையத் தலைவர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்தார். (ஒ-25-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்


மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஒஸ்லோவின் நியாயம்!

பலஸ்தீனத்தை தனிநாடாகஏற்று அங்கீகரிப்பதாக அறிவித்திருக்கின்றது நோர்வே. கூடவே ஸ்பெய்ன் மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகளும் கூட்டாகச் சேர்ந்து இந்த அறிவிப்பை விடுத்திருக்கின்றன. மத்திய கிழக்கில் - அதிலும் குறிப்பாக காஸாவில் அமைதி திரும்ப வேண்டுமாயின், இஸ்ரேல் மற்றும் பலஸ்தீனம் என்ற 'இரு நாட்டுக் கொள்கையே ஒரே தீர்வு' என்பதே இந்த நாடுகளின் கருத்தாக அமைந்துள்ளது. பலஸ்தீனம் அங்கீகரிக்கப்பட்டால் அதன் இராணுவக் கொள்கைகள் தொடர்பில் இந்த நாடுகள் தெளிவாகத் தெரிவிக்கவில்லையாயினும் தனி நாடு என்பதில் ஒன்றித்திருக்கின்றன. நல்லது! பலஸ்தீனத்துக்கு ஐ.நா.வில் முறையான அங்கீகாரம் ஒன்று இப்போதைக்குக் கிடைக்கச் சாத்தியமேயில்லை. ஏனெனில், அமெரிக்காவின் வீட்டோ அதிகாரம் பலஸ்தீனர்களின் வேணவாக்களுக்கு முன்பாக பூதம் போன்று வியாபித்திருக்கின்றது. எனவே, ஐ.நா.வுக்கு அப்பாற்பட்ட தீர்வுகளும், ஐ.நா.வுக்கு வெளியே மேற்கொள்ளப்படும் வலியுறுத்தல்களும் தான் பலஸ்தீனர்களின் சுதந்திரத்தில் காலத்தேவையானவை என்றிருக்கையில்தான் 'சுதந்திரப் பலஸ்தீனத்துக்கான' வலியுறுத்தலை மேற்கொள்வதற்காக நோர்வே - ஸ்பெய்ன் - அயர்லாந்து எனும் இந்தக் கூட்டணி அமைக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால், இன்று பலஸ்தீனத்துக்காகத் துடிக்கும் நோர்வே, ஈழத்தமிழர்களின் விடயத்தில் தான் ஆற்றிய பங்களிப்பு என்ன? என்ற கேள்வியையும் எழுப்பவேண்டியது இன்று தவிர்க்கமுடியாததாகின்றது. விடுதலைப் புலிகளின் ஆயுதங்கள் மௌனிக்கப்படாதிருந்த அக்காலத்தில், ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பேச்சுகளை - இராஜதந்திர நடவடிக்கைகளை மேற்கொண்ட நாடுகளில் நோர்வேக்கும் பிரதான பங்குண்டு. இதனால்தான், 'ஒஸ்லோ புரிந்துணர்வு பேச்சுகளில்' ஈடுபட்டு, பல விட்டுக்கொடுப்புகளைச் செய்துகொள்ளவும் புலிகள் இணங்கினர். அந்தளவுக்கு தமிழர்களின் நலன்களை நோர்வே புரிந்து வைத்திருக்கின்றது என்ற நம்பிக்கை எம்மினத்தில் இருக்கவும் செய்தது. ஆனால், 'சுதந்திரப் பலஸ்தீன அறிவிப்புப் போன்ற' தற்றுணிவான அறிவிப்புகளை ஈழத்தமிழர் விடயத்தில் மேற்கொள்வதற்கு நோர்வேயால் முடிந்ததா? அல்லது நோர்வே செய்துவிட்ட காரியம்தான் என்ன?

இன்று காஸாவில் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் காட்சிகள்தான் அன்று முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றன. இஸ்ரேலிய இராணுவத்துக்கு எதிராக இன்று முன்வைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போர்க் குற்றச்சாட்டுகள்தான் இலங்கை இராணுவத்துக்கு எதிராகவும் முன்வைக்கப்பட்டன. காஸாவில் இன அழிப்பின் மூலம் ஜியோனிசமும் யூதமும். முள்ளிவாய்க்காலில் இன அழிப்பின் மூலம் 'பௌத்த பேரினவாதம்' அவ்வளவே வேறுபாடு. மற்றும்படி குருதிச் சகதியும், சதைத் துண்டுகளும் ஒன்றுதான். சுதந்திரப் பலஸ்தீனத்துக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் போடப்படும் முட்டுக்கட்டைகளை மேவிய தற்றுணிவான அறிவிப்பைப்போன்று, ஈழத்தமிழர்களின் நலன்களிலும் ஒஸ்லோ தூய சிந்தனையைக் கொண்டிருந்தால், ஈழத்தமிழர்களின் மனக்காயங்களுக்கு அது மருந்தாகவே அமைந்திருக்கும். ஆனால், நோர்வே இழைத்ததோ வரலாற்றுத் தவறு. ஈழத்தமிழர்களின் முதுகைக் குத்திக் கிழித்துக் கொண்டிருக்கும் வாள்களில் ஒன்று நோர்வேயுடையதும் தான். அதில் தமிழர்கள் தெளிந்த சிந்தனையை என்றும் கொண்டிருப்பர்...!



# ரணில் இல்லையேல் வங்குரோத்து உறுதி



கூறுகிறார் வஜிர

**கொழும்பு, மே 25**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இன்னும் 12 வருடங்களுக்கு நாட்டை ஒப்படையுங்கள். இல்லையெனில் இலங்கை மீண்டும் வங்குரோத்து நிலையை அடையும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையைப் பொறுத்தவரையில் அடுத்து நாட்டை ஆட்சி செய்யக்கூடிய வல்லமைமிக்க ஜனாதிபதி யார்? என்ற கேள்விக்கு எந்தவொரு தரப்பினரிடமும் உரிய பதிலில்லை. தேசிய அரசியலிலும் சரி, கட்சி அரசியலிலும் சரி எந்தவொரு தரப்பும் பொருத்தமான தலைமைகளை உருவாக்கவில்லை என்பதே கசப்பான உண்மை. ரணில் விக்கிரமசிங்கவின் பாதையை மாற்றினால் எமது நாடு மிகவும் கடினமான நிலைக்கு மீண்டும் தள்ளப்படும் - என்றார். (ச-இ)

# மானிய வட்டியில் கடன் திட்டங்கள்

கொழும்பு, மே 25
எதிர்வரும் வாரத்திலிருந்து பல விசேட கடன் திட்டங்களை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தீர்மானித்துள்ளது.
அதன்படி, தொழில்துறையினரின் நிதித்தேவைகள் பிராந்திய மற்றும் மாவட்ட மட்டத்தில் கண்டறியப்பட்டு, வர்த்தக வங்கிகள் ஊடாக மானிய வட்டி விகிதத்தில் கடன் வழங்கும் வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன என்று கைத்தொழில் அமைச்சு தெரிவித்துள்ளது.
குறிப்பாக 7 வீதம் மற்றும் 8 வீதம் போன்ற மானிய வட்டியில் கடன் வழங்கத் திட்டமிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# நீர்மட்டம் உயர்வு

கொழும்பு, மே 25
நாட்டின் பிரதான நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம் 80 வீதமாக உயர்வடைந்துள்ளதாக நீர்ப்பாசனத்துறை தெரிவித்துள்ளது.
நாட்டில் நிலவிவரும் மழையுடனான கால நிலை காரணமாக இவ்வாறு நீர்மட்டம் உயர்வடைந்துள்ளது.
எதிர்வரும் நாள்களில் மழை பெய்தால் மேலும் நீர்மட்டம் உயர்வடையும் என்றும் எதிர்வுகூறப்பட்டுள்ளது. (ச-இ)

# மாற்றமில்லை!

கொழும்பு, மே 25
லங்கா பிறீமியர் லீக் போட்டிகள் திட்டமிட்டபடி ஜூலை முதலாம் திகதி முதல் 21ஆம் திகதி வரை நடைபெறுமென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். தம்புள்ள தண்டேர்ஸ் அணி தொடர்பான சர்ச்சைகளைத் தொடர்ந்தே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-6)

# பாதாளக்குழு 11 பேர் கைது

கொழும்பு, மே 25
பாதாள உலகச் செயற்பாடுகளை ஒடுக்குவதற்காக உருவாக்கப்பட்ட விசேட குழுவினரால் கடந்த புதன் கிழமை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது பாதாள உலக கும்பலைச் சேர்ந்த 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் பாதாள உலகக் கும்பலுடன் தொடர்புகளைப் பேணிய குற்றச்சாட்டில் மேலும் 5 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச)

## நாளை

26.05.2024
**ஞாயிற்றுக்கிழமை**
**வைகாசி - 13**

சுபநேரம் : 08.52 - 10.22
ராகுகாலம் : 04.22 - 05.52

## நாளொரு நல்வார்த்தை

**அறிவுத் தேவையைவிட**
**கவனக்குறைவுதான்**
**அதிக கஷ்டத்தை உண்டாக்கி விடுகிறது.**

**-வின்ஸ்டன் சேர்ச்சில் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி அபகரிப்பைத் தடுக்க அனைவருக்கும் உரித்துண்டு

## சுமந்திரன் எம்.பி. சுட்டிக்காட்டு

**கொழும்பு, மே 25**

**மன்னாரில் அபிவிருத்தி என்ற போர்வையில் அடாத்தாகக் காணிகளை அபகரித்தால், அந்த ஆக்கிரமிப்பையும் அபகரிப்பையும் தடுத்து நிறுத்த அனைவருக்கும் உரிமையுண்டு என்று ஜனாதிபதி சட்டத்தரணியும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

காற்றாலை மற்றும் கனியவள மணல் அகழ்வுக்காக காணிகளை அபகரித்து வெளியாருக்கு விற்பனை செய்வதைத் தடுக்கும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் தீவு கடல் மட்டத்துக்கு கீழ் அமைந்துள்ள ஒரு தீவு. அந்த வகையில் கனியவள மணல் அகழ்வானது இங்கு பொருத்தமற்ற செயற்பாடு. எவராவது அடாத்தாகக் காணிகளை அபகரித்தால் பாதிப்டைந்தவர்கள் உடனடியாகச் சட்டத்தை நாடலாம். அதற்கான சட்ட நடவடிக்கைகளை நாம் மேற்கொண்டுள்ளோம். இந்த அபிவிருத்திச் செயற்பாடுகள் இந்த இடத்துக்குப் பொருத்தமற்றது எனக் கண்டறியப்பட்டால் சுட்டிக்காட்டி நடவடிக்கை எடுக்க முடியும். சுற்றுச்சூழலுக்கு பாதிப்பை ஏற்படுத்துமா? என்ற விடயங்களையும் ஆராய்ந்து இதைத் தடுத்து நிறுத்த காணிகளுக்குச் சொந்தக்காரர்களாக இருக்கவேண்டிய எந்த அவசியமுமில்லை. ஆகவே அடாத்தாகக் காணிகளை அபரித்து அபிவிருத்தி என்ற போர்வையில் இறங்குவோருக்கு எதிராக அவற்றைத் தடுப்பதற்கு - தட்டிக் கேட்பதற்கு சகலருக்கும் உரித்து உண்டு - என்றார். (ச-60)

## நயினை நாகபூஷணி திருவிழா; முன்னாயத்தக் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 25

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் ஆலயப் பெருவிழா தொடர்பான முன்னாயத்தக் கலந்துரையாடல், யாழ்.மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

கலந்துரையாடலில் திருவிழாக் காலங்களில் வழமை போன்று, யாழ்.பிரதான பேருந்து தரிப்பு நிலையத்திலிருந்து குறிகாட்டுவான் வரையிலான இலங்கைப் போக்குவரத்துச் சேவை மற்றும் தனியார் பேருந்துச் சேவைகளின் ஒருவழிக் கட்டணம் 187 ரூபா எனவும், குறிகாட்டுவானிலிருந்து நயினாதீவு நாகபூஷணி அம்மன் ஆலயம் நோக்கிப் படகில் கடற்போக்குவரத்துச் செய்வதற்கான ஒருவழிக்கட்டணம் 80 ரூபா எனவும் தீர்மானிக்கப்பட்டது.

கடற்போக்குவரத்து நேரத்துக்கமைய, தனியார் போக்குவரத்து மற்றும் இலங்கை போக்குவரத்துப் பேருந்துச் சேவை என்பன காலை 6 மணி முதல் இரவு 7.30 மணி வரை சேவையில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் ஆலயத்துக்கு அருகாமையில் அமைந்துள்ள கள் விற்பனை நிலையத்தை ஆலயப் பெருவிழாக் காலத்தில் பூட்டுவதெனவும், பொலிஸ் பாதுகாப்பைப் பெற்றுக் கொள்வது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக செயலர் க.ஸ்ரீமோகன், உதவி மாவட்டச் செயலர் உ.தர்சினி, வேலணைப் பிரதேச செயலாளர் க.சிவகரன், பிராந்திய சுகாதார மருத்துவ அதிகாரி ஆ.கேதீஸ்வரன், நயினாதீவு நாகபூஷணிஅம்மன்ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் பரமலிங்கம், இலங்கை போக்குவரத்துச்சபையின் அதிகாரிகள், கடற்படை அதிகாரிகள், பொலிஸ் தரப்பினர், துறைசார் திணைக்களத் தலைவர்கள், சுகாதாரத் துறைசார் பங்குதாரர்கள், பிரதேசசபையின் பங்குதாரர்கள் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ப-66)

## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், மே 25

மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் தலைவர் இ.நாகேந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ச)

## அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 25

கைதடி, கோப்பாய் வீதியில், டிப்பர் வாகன விபத்தில் உயிரிழந்த தென்மராட்சிக் கல்வி வலய தொழில் வழிகாட்டல் ஆலோசனை அதிகாரி அமரர் க.ஈஸ்வரனின் அஞ்சலி நிகழ்வு, மட்டுவில் சந்திர மௌலிச வித்தியாலய மண்டபத்தில், அதிபர் க.எழிலழகன் தலைமையில் இன்று சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ஈகைச்சுடரை திருமதி தயாளினி ஈஸ்வரன் ஏற்றுவதுடன் அஞ்சலியுரைகள் இடம்பெறவுள்ளன. அஞ்சலிப்பாவினை சங்கீத வித்துவான் தெ.திருவேரகன் ஓதுவார். தொடர்ந்து தென்மராட்சிக் கல்வி வலயப் பணிப்பாளர் கி.கமலராஜன், தென்மராட்சிக் கல்வி வலய முன்னாள் வலயக் கல்விப்பணிப்பாளர் சு.கிருஸ்ணகுமார், கோப்பாய் ஆசிரியப் பயிற்சிக்கலாசாலை அதிபர் ச.லலீசன், தென்மராட்சி வலயக் கல்விப் பணிமனை ஓய்வுநிலை கோட்டக் கல்விப் பணிப்பாளர் கு.சிவானந்தன், சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் ந.சர்வேஸ்வரன் எனப் பலரும் அஞ்சலியுரையை நிகழ்த்தவுள்ளனர். (ப-131)

## முதியோருக்கு கொடுப்பனவு!

யாழ்ப்பாணம், மே 25

தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில், முதியோர்களுக்கான கொடுப்பனவுகள், கடந்த புதன்கிழமை தொடக்கம் தபால் அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகின்றன. தகுதியுடைய பயனாளிகள் அனைவரையும், உரிய தபாலகங்களுக்குச் சென்று பணத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ப-159)

## விசாகப் பொங்கல்

யாழ்ப்பாணம், மே 25

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலயம், கண்ணகி அம்மன் ஆலயங்களில் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு திருஞான சம்பந்தர் குருபூசையும், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு திருவாசகம் முற்றும் ஓதும் நிகழ்வும், இடம்பெறுமென ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்துள்ளனர். (ப)

## குருபூசை நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 25

சைவபரிபாலனசபை ஏற்பாடு செய்துள்ள திருஞான சம்பந்தர் மூர்த்தி நாயனார் குருபூசை நிகழ்வு, சபைப் பிரார்த்தனை மண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சபைத் தலைவர் உ.தயானந்தன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் செட்டித்தெரு மெதடிஸ்த மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் க.சசிகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். (ப)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். கடன் வாங்குவதைத் தவிர்க்கவும். மற்றவர்களுடன் பேசும்போது வார்த்தைகளில் நிதானம் தேவை. தாயின் உடல்நலனில் அக்கறை காட்டவும். சிரமங்கள் பெரிதும் குறையும்.

**இடபம்:** உடல் ஆரோக்கியம் மேம்படும். சிலருக்கு திடீர்ப் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. தொல்லைகள் நீங்கும். காரியம் அனுகூலமாக முடியும். பண உதவி கிடைக்கும். மகாலட்சுமியை வழிபட நன்மைகள் அதிகரிக்கும்.

**மிதுனம்:** சகோதரர்களின் ஆதரவு உற்சாகம் தரும். திடீர்ச் செலவுகள் ஏற்படக்கூடும். புதிய முயற்சி அனுகூலமாக முடியும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படக்கூடும். சுபச்செய்தி ஒன்று கிடைக்க வாய்ப்புண்டு.

**கடகம்:** காரியம் இழுபறியாக முடியும். ஆதாயமும் உண்டாகும். புதிய முயற்சியைத் தொடங்குவது நல்லது. முருகப்பெருமானை வழிபடுவது நலம் தரும். உணர்வுகளைப் புரிந்து கொண்டு செயற்படுவது அவசியம்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியம், வீண் அலைச்சலையும் செலவுகளையும் கொடுத்தாலும், சாதகமாக முடிந்துவிடும். மனதில் அடிக்கடி குழப்பம் ஏற்படக்கூடும். பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**கன்னி:** தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடுவீர்கள். மகிழ்ச்சி ஏற்படும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு நல்லபடி முடியும்.

**துலாம்:** எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. ஆதாயம் உண்டாகும். செலவு செய்ய வேண்டி வரும். சங்கடங்கள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சி எதையும் மேற்கொள்ளவேண்டாம். செலவு செய்யவேண்டி வரும். மனதில் இனம் தெரியாத குழப்பம் ஏற்பட்டு நீங்கும். பொறுமையைக் கடைப்பிடிப்பது அவசியம்.

**தனுசு:** மனதில் உற்சாகமும், செயல்களில் பரபரப்பும் காணப்படும். பணவரவுடன் திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. அனுகூலம் உண்டாகும். மகாலட்சுமியை வழிபடுவது மிகச் சிறப்பு.

**மகரம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரிய அனுகூலம் உண்டாகும். ஆரோக்கியம் மேம்படும். ஆதாயம் ஏற்படக்கூடும். வீண் அலைச்சலும், செலவுகளும் ஏற்பட வாய்ப்பிருக்கிறது. வீண் பிரச்சினைகளில் இருந்து விடுபட முடியும்.

**கும்பம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். மனஉறுதியுடன் முடிவெடுத்துச் செயற்படுவீர்கள். செலவு செய்யவேண்டி வரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பாராத செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

**மீனம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். துணிச்சலாகச் செயற்படுவீர்கள். புதிய முயற்சி சாதகமாக முடியும். தெய்வப்பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு ஏற்படும். ஆதாயம் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், மே 25

நல்லூர் ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 76 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு மரதன் ஓட்டமும் காலை 8.30 மணிக்கு மைதான விளையாட்டுக்களும் இடம்பெறவுள்ளன. தொடர்ந்து மூன்றாம் நாள் நிகழ்வாக நாளை ஞாயிற்றுக்கிழமை சைக்கிள் ஓட்டம் காலை 7 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (ஒ-இ)

துடுப்பாட்டப் போட்டி

## இன்று ஆரம்பம்

யாழ்., மே 25

அல்வாய் மனோகரா சனசமூக நிலையமும், அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் இணைந்து முன்னெடுத்த மாபெரும் சிநேகபூர்வ துடுப்பாட்டப் போட்டி, மனோகரா விளையாட்டுக் கழக மைதானத்தில் மேற்படி நிலையத் தலைவர் ஸ்ரீ.முகுந்தன் தலைமையில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (ப-66)


### பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை

திருநெல்வேலிப் பகுதியில் உள்ள நிறுவனத்திற்கு இரவு, பகல் பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.

076 817 8997, 077 160 6709, 076 143 4002

(CS/55170) J-1

### மணப்பெண் தேவை

பிரான்ஸ் வதிவிட சான்றிதழ் உள்ள சித்திரை நட்சத்திர உதயத்து செவ்வாய் வரனுக்கு படித்த அழகான மணப் பெண் தேவை.

சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது

தொடர்பு: 077 659 0606

### THE ROYAL COLLEGE OF JAFFNA

10ம் ஆண்டு மாணவர்களுக்கு சிறு குழுக்களாக வகுப்புக்கள். O/L பரீட்சையில் "A" சித்தி பெற சிறந்த ஆசிரியர் குழாம், தனித்தனி கவனம், விரும்பிய பாடத்தெரிவு.


குபேரன் கட்டட மாடி, சங்கானை.

தொடர்பு: 077 675 1649

(CS/55169) J-1


## கண்ணீர் அஞ்சலி

பிறப்பு 01 . 08 . 1961



இறப்பு 23 . 05 . 2024

எமது கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக ஆர்வலரும் கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

**மாணிக்கநடராஜா ஜெகன்மோகன்**

அவர்கள் நேற்று முன்தினம் (23.05.2024) வியாழக்கிழமை அன்று கனடாவில் பூவுலகிலிருந்து விடைபெற்றுக்கொண்டார்.

அன்னார் கொக்குவில் இந்துக்கல்லூரி, கொக்குவில் மத்திய சனசமூக நிலையம் (KCCC), கனடா பழைய மாணவர் சங்கம், கொக்குவில் விளையாட்டுக் கழகம் - கனடா, உட்பட கொக்குவில் கிராமத்தின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்காக இறுதிவரை அயராது உழைத்த அற்புதமான மனிதர்.இவர் எமது வளர்மதியின் வளர்ச்சியிலும் பங்காளியாக இருந்து பணியாற்றியவர். அவரின் மறைவிற்கு எமது இறுதி அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் வளர்மதியின் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சம்பியன் லேன்
கொக்குவில்

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகம்
வளர்மதி நிறைவாழ்வகம்

(CS/572) J-1

## முதலாம் ஆண்டு நன்றிசெலுத்தும் நிகழ்வு

"உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே,
என்னிடம் நம்பிக்கைகொள்பவர் இறப்பினும் வாழ்வர்"
(யோவான் 11:25)

ஆண்டவருள் நித்திரையடைந்த **அமரர் திருமதி**

**கிறீஸ்ரீனா விஜயலட்சுமி தேவராசா**

**(போதகர் அம்மா)**



அவர்களின் நன்றி செலுத்தும் வழிபாடு நாளை (26.05.2024) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11.30 மணிக்கு கச்சேரி வை.எம்.சீ.ஏ. (Y.M.C.A) மண்டபத்தில் நடைபெறும்.


அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

அருட்பணி தேவராசா
குடும்பத்தினர்.

ஏ-9 வீதி, மாங்குளம்,
தொ.பே: 077 540 9277

(CS 575)A-1

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் : 14.10.1939 மறைவு : 20.05.2019

**அமரர் உயர்திரு சின்னத்தம்பி முருகேசு**

திதி: அபரபக்க துதியை

அப்பா! நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து ஐந்து ஆண்டுகள் ஓடிவிட்டது. ஆனாலும் உங்கள் நினைவுகள் எங்கள் மனதில் இன்னும் பசுமையாக ஓடிக்கொண்டிருக்கிறது உங்கள் தன்னலமற்ற அறிவான உயர்ந்த நடத்தையும் என்றுமே எங்களுடன் கோபப்படாத உயர்ந்த மனமும் நாங்கள் தவறு செய்யும் போது ஒரு பார்வையால் அதைப் பிழையென உணர்த்தும் திறனும் எம் கண்முன்னே வந்து நிற்கின்றது அப்பா. அப்பா உங்கள் வாழ்க்கையில் எவ்வளவோ சவால்கள் வந்தாலும் பொறுமையாக எல்லாவற்றையும் வெற்றிகரமாக சமாளித்து வென்று எங்கள் எல்லோரையும் நல்வழிப்படுத்தி ஓர் உயர்ந்த இடத்திறகு கொண்டுவந்தீர்கள்.

அப்பா அன்று எம் அனைவருடனும் அன்பைச் சொரிந்து பண்புடனே பாசமாய் பழகிய நீங்கள் முற்றிலும் எம்முறவை விட்டு அகன்று சென்றாலும் உங்கள் நினைவுடனேயே நாம் எந்நாளும் வாழுவோம். அப்பா அன்று எங்களுடன் இருந்து எம்மை வழிப்படுத்திய நீங்கள் இன்று இறைவனுடன் இருந்து எம்மை வழிப்படுத்திச் செல்லுங்கள் அப்பா

உங்கள் ஆத்மா எல்லாம் வல்ல பரமேஸ்வரன் பாதம் சென்றடைய வேண்டுகிறோம். *ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!*

சங்கத்தானை
சாவகச்சேரி

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 05 . 1956



மறைவு 24 . 05 . 2024

**திருமதி மகாலிங்கம் கமலாம்பிகை (கமலா)**

சாவகச்சேரியை பிறப்பிடமாகவும், ஐயா கடை வீதி, மீசாலை மேற்கு மீசாலையை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் கமலாம்பிகை அவர்கள் நேற்று (24.05.2024) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சதாசிவம் - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், மகாலிங்கத்தின் அன்பு மனைவியும், சிவகேசன், இராஜாஜி (இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்), சிவலோஜினி (பிரதேச சபை, சாவகச்சேரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், அகிலன் (CIC Agri business, Northern Region), பிருந்தா ஆகியோரின் அன்பு மாமியாரும், மஹதியின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற கதிர்காமநாதன் மற்றும் பத்மநாதன், மோகனாம்பிகை ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஜெயதீஸ்வரியின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2024) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மகன் - 077 592 7829
மருமகன் - 077 235 4882

தகவல்:
குடும்பத்தினர்

(CR 42500) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழர்கள்...

முன்பாகத் தெரிவித்தார். யாழ். போதனா மருத்துவமனையில் மருத்துவபீடத்துக்கான கட்டடத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் பங்கேற்று அவர் மேலும் தெரிவித்ததாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் சுமந்திரன் இவ்வாறு கூறியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“ஜனாதிபதி ரணில் இன்று இங்கு வந்தத்றகுத் தனிப்பட்ட முறையில் நன்றி கூறுகிறேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலம் முதல் வடக்கு மற்றும் கிழக்கின் அபிவிருத்திக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டுள்ளார். இன்று (நேற்று) திறந்து வைக்கப்படும் யாழ். பல்கலைக்கழகத்தின் இந்த மருத்துவபீடக் கட்டடம் வடக்குக்கு மாத்திரமன்றி நாட்டுக்கும் ஒரு நல்ல முதலீடாகும் எனச் சுட்டிக்காட்டலாம்.

மேலும் இது எதிர்காலத்தில் இலங்கையில் நிபுணர்களின் புகலிடமாகமாறும் என நான் நம்புகிறேன். முன்னதாக இச்சபையில் உரையாற்றியவர்கள் கூறியதுபோல் யாழ். மாவட்டத்தின் அபிவிருத்தியிலும், மக்களின் அபிவிருத்தியிலும் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளார்.

2005 இல் உங்கள் பயணத்துக்கு வடக்கு மக்கள் தடையாக இருந்திருக்கலாம். அதை வடபகுதி மக்கள் இப்போதாவது வருத்தத்துடன் நினைவு கூர்வார்கள் என நினைக்கிறேன். இத்திட்டத்தை நடைமுறைப்படுத்திய யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தை நான் வாழ்த்துகிறேன்.

இந்த முதலீடு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். யாழ். மாவட்டத்துக்கு வருகை தந்த ஜனாதிபதியை அன்புடன் வரவேற்பதுடன், இந்தப் பயணத்தின்போது வடக்குக்கு அவர் ஆற்றிவரும் அனைத்துப் பணிகளையும் பாராட்டுகின்றோம், என்று சுமந்திரன் உரையாற்றினார் என அந்த ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ஒ-5-125-26)

## விடுவிக்கக்கூடிய...

- இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

‘உறுமய’ வேலைத்திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட மக்களுக்கான காணி உறுதிப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வில் நேற்றுக் கலந்துகொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

“யாழ். மாவட்டத்தின் 15 பிரதேச செயலகப் பிரிவுகளையும் உள்ளடக்கிய ஆயிரத்து 286 இலவசப் பத்திரங்கள் மக்களிடம் வழங்கி வைக்கப்பட்டதுடன், காணி உறுதிப் பத்திரங்களை ஜனாதிபதி அடையாளமாகச் சிலருக்கு வழங்கி வைத்தார்.

‘உறுமய’ வேலைத்திட்டத்தின் கீழ் வடமாகாணத்தின் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு 13 ஆயிரத்து 858 இலவசக் காணி உறுதிப்பத்திரங்கள் எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ளன.

கடந்த பொருளாதார நெருக்கடி காரணமாக இடைநிறுத்தப்பட்ட வடமாகாண வீட்டுத்திட்டம் அடுத்த வருடம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படும். இந்த இலவசக் காணி உரிமைத் திட்டம் அதன் ஒரு படியாகும். ‘உறுமய’ வேலைத்திட்டம் நாட்டிலேயே மிகப்பெரிய தனியார்மயமாக்கல் வேலைத்திட்டம்.

நாட்டு மக்களுக்கு இலவசக் காணி உரிமை வழங்கும் வேலைத்திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். இந்த வேலைத்திட்டத்தை நாடளாவிய ரீதியில் அனைத்துப் பகுதிகளிலும் நடைமுறைப்படுத்துவதே எமது நோக்கமாகும். அனைத்து மக்களுக்கும் அவர்கள் வாழும் மண்ணில் முழு உரிமையுள்ள காணி உரிமை வழங்கப்படவேண்டும்.

இந்தப் பத்திரங்கள் இன்று (நேற்று) வழங்கப்பட்டதுபோன்று, இந்தப் பணி எதிர்காலத்திலும் முன்னெடுக்கப்படும். காணி ஆணையாளர் திணைக்களத்தில் பணியாளர்கள் பற்றாக்குறையால், பணிகள் சற்றுத் தாமதமாகி வருகின்றன. அதுபற்றிக் கலந்துரையாடிய பிறகு, காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்துக்கு 100 புதிய பணியாளர்களையும், நில அளவைத் திணைக்களத்திற்கு 150 பேரையும் நியமனம் செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்காலத்தில் இந்த வேலைத்திட்டத்தை மிகவும் திறமையான முறையில் நடைமுறைப்படுத்தமுடியும்.

காணிப்பிரச்சினை வடக்கு மாகாணத்தையும் கிழக்கு மாகாணத்தையும் கடுமையாகப் பாதித்துள்ளது. அரசாங்கக் காணிகளில் குடியேற்றப்பட்ட மக்களைத் தவிர போரால் காணிகளை இழந்தவர்கள் ஏராளம். தீர்க்கப்படவேண்டிய இரண்டு பிரச்சினைகள் உள்ளன. வடக்கு மற்றும் கிழக்கைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவ்வப்போது என்னுடன் இது குறித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

அதற்கமைவாக, பாதுகாப்புத் தரப்பினருடன் கலந்துரையாடி, பாதுகாக்கப்பட்ட பிரதேசங்களில் உள்ள காணிகளில், காணி விடுவிக்கப்படக் கூடிய சந்தர்ப்பங்களில் அந்த அனைத்துக் காணிகளும் மக்களிடம் மீள ஒப்படைக்கப் பட்டுள்ளது.

மேலும், வனவளப் பாதுகாப்புத்துறை கையேற்ற காணிகள் குறித்தும் பிரச்சினை உள்ளது. இந்தப் பிரச்சினை வடக்கு - கிழக்கில் மட்டுமல்ல. தென் மாகாணத்திலும் உள்ளது. எனவே, 1985 வரைபடத்தின்படி, காடுகளாக உள்ள பகுதிகளை, காடுகளாகப் பேணவும், மீதமுள்ள காணிகளை காடு அல்லாத பகுதிகளாக கருதவும் கொள்கை ரீதியான முடிவு எடுத்துள்ளோம். தற்போது அது தொடர்பில் ஆலோசித்து வருவதோடு, குறிப்பிட்ட காணிகளை வழங்குமாறும் தெரிவித்துள்ளோம்.

தொல்பொருளியல் திணைக்களத்தின் கீழும் அதிக அளவிலான காணிகள் உள்ளன. தொல்பொருளியல் நடவடிக்கைகளுக்குத் தேவையான காணிகளைத் தவிர்த்து ஏனைய காணிகளை மீள ஒப்படைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அதன் பிரகாரம் இந்தக் காணிகள் அனைத்தையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

அத்துடன் யாழ்ப்பாணத்தின் உயர்பாதுகாப்பு வலயம் பாரியளவில் குறைக்கப்பட்டுள்ளது. விசேட ஆய்வுகளின் பின்னர் மேலும் விடுவிக்கப்படக்கூடிய காணிகளை விடுவிக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

அத்துடன், உயர் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மத வழிபாட்டுத் தலங்களுக்குச் சொந்தமான காணியின் ஒருபகுதி ஏற்கனவே விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க நாட்டின் அனைத்து மக்களினதும் காணி உரிமையை உறுதிப்படுத்தி முன்னோக்கிச் செல்வதற்கான வாய்ப்பை உருவாக்க எதிர்பார்க்கின்றேன்.

அத்துடன் கடந்த இரண்டு வருடங்களாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடி காரணமாக இம்மாகாண மக்களுக்குத் தேவையான வீடுகளை நிர்மாணிப்பதற்கான நிதியை ஒதுக்கமுடியவில்லை. ஆனால், அடுத்த ஆண்டு முதல் மீண்டும் அது ஆரம்பிக்கப்படும் என்பதைக் கூற விரும்புகிறேன்.

இந்த இலவசப் பத்திரங்களை வழங்குவதும் அந்தத் திட்டத்தின் ஒரு பகுதி என்றுதான் கூறவேண்டும். இலவசப் பத்திரங்களை வழங்குவதை இந்நாட்டின் மிகப்பெரிய தனியார்மயமாக்கும் திட்டம் என்று கூறலாம்.

ஜப்பான், கொரியாவைத் தவிர வேறு எந்த நாடும் அந்த வகையில் மக்களுக்கு காணி உரிமை வழங்கவில்லை. ஆனால், ஜப்பானும் கொரியாவும் மக்களுக்கு இலவசமாகக் காணி உரிமையை வழங்கவில்லை. குறைந்த விலையில் வாங்குவதற்கான வாய்ப்பை மட்டுமே தருகின்றன. ஆனால், எமது நாட்டில் மக்களுக்கு இலவசக் காணி உரிமையை வழங்குவதற்காகச் செயற்பட்டு வருகின்றோம்.

பருத்தித்துறையிலிருந்து தேவேந்திரமுனை வரையிலும் மட்டக்களப்பில் இருந்து நீர்கொழும்பு வரையிலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளோம். இலங்கை மக்கள் தங்கள் இனம் அல்லது மதம் எதுவாக இருந்தாலும் பாரம்பரியமாக காணி உரிமையை மதிக்கின்றனர். இன்று நீங்கள் அதைச் சரியாகப் புரிந்துகொள்கிறீர்கள். அந்த நிலத்தைப் பாதுகாத்து உங்கள் பிள்ளைகளுக்குக் கொடுப்பது உங்கள் பொறுப்பு என்பதை நினைவூட்ட விரும்புகிறேன் - என்றார். (அ-ஒ-5-26-125)

## மீன்பிடிக்கச் ...

அதேயிடத்தைச் சேர்ந்த குட்டிராசா சசிகுமார் (வயது-44), முருகையா சுஜாந்தன் (வயது-32) ஆகிய இரு மீனவர்களும் வழமை போன்று இயந்திரப் படகில் கடலுக்குச் சென்றனர். இருவரும் அடுத்த நாள் காலை கரைக்குத் திரும்பவில்லை.

காணாமல் போனவர்களின் உறவினர்களால் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திலும், பொலிஸிலும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (அ-ஒ-50)

## கத்திக்குத்தில்...

கடந்த 2ஆம் திகதி தாவடியில் இடம்பெற்ற இந்தக் கத்திக்குத்துத் தாக்குதலில் காயங்களுடன் சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே குறித்த இளைஞர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

வரதராசா நியூட்சன் (வயது-23) என்பவரே உயிரிழந்துள்ளார்.

அக்காவின் கணவருக்கும் இளைஞனின் தந்தைக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது. முரண்பாட்டை விலக்கச் சென்ற இளைஞன் மீது அக்காவின் கணவர் கத்தியால் குத்தியதாகப் பொலிஸார் கூறுகின்றனர். இளைஞனின் தந்தை மீதும் தலைக்கவசத்தால் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இளைஞர் கடும் காயங்களுடன் யாழ். போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். சந்தேகநபரான அக்காவின் கணவர் சுன்னாகம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ஏற்கனவே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ஒ-26-125)

## கெமுனு...

காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் பணிபுரியும் தமிழ்ப் பொலிஸாருக்கே இது தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.

கெமுனு விகாரையில் நேற்று பி.ப. 4 மணிக்கு பிரித் ஓதுதல் தமிழ் மொழியில் இடம்பெற்றுள்ளது. இதற்காக பிக்கு ஒருவர் கொழும்பிலிருந்து வந்துள்ளார். இதன் காரணமாக காங்கேசன்துறை பொலிஸ் பிராந்தியத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பணியாற்றும் தமிழ்ப் பொலிஸாரை விகாரை வழிபாட்டில் கட்டாயமாகப் பங்கேற்குமாறு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து தமிழ்ப் பொலிஸார் அங்கு சென்று பிரித் ஓதும் நிகழ்வில் பங்கேற்றனர். (அ-ஒ-ம-26)

## இரா.சம்பந்தனின்...

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்,

இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்கு பகுதிகளுக்கு உள்ளக சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டித் தீர்வு இருக்கும் என்பது சர்வதேச மட்டத்தில் கடைசியாக ஒப்புக்கொள்ளப்பட்ட விடயம் என்றும் அதற்கு தமிழ்ப் பொதுவேட்பாளர் விடயம் குந்தகம் விளைவிக்கும் என இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

ஆனால், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான சமாதான நடவடிக்கையில் பங்குபற்றியவன் என்ற அடிப்படையில் சம்பந்தனின் கூற்றுத் தொடர்பில் உண்மையைத் தெளிவுபடுத்தவேண்டியுள்ளது.

உள்ளக சுயநிர்ணயத்தின் அடிப்படையில் ஒரு கூட்டாட்சித் தீர்வை ஏற்படுத்துவதற்கு புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையில் எந்தவொரு உடன்பாடும் ஏற்படவில்லை. மாறாக ‘தமிழ் பேசும் மக்களின் வரலாற்று தாயகப் பகுதிகளில் உள்ளக சுயநிர்ணயக் கோட்பாட்டின் அடிப்படையில் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டித் தீர்வு தொடர்பாக ஆராய்வதற்கு கட்சிகள் ஒப்புக்கொண்டன’ என்பதுதான் உண்மை.

இது தொடர்பில் புலிகளின் தத்துவாசிரியர் அன்ரன் பாலசிங்கமும் தனது ‘போரும் அமைதியும்’ என்ற புத்தகத்தில், ஒஸ்லோ பிரகடனம் என்ற ஒன்று இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

சமாதான முயற்சியில் ஈடுபட்ட தரப்பினர் சமஷ்டித் தீர்வை ஆராய்வதற்கு மட்டுமே ஒப்புக்கொண்டார்கள் என்ற உண்மையை அவரும் வலியுறுத்தியுள்ளார். விடுதலைப் புலிகள் சுதந்திர தமிழீழத்தை ஒருபோதும் கைவிடவில்லை. உள்ளக சுயநிர்ணயத்தின் அடிப்படையிலான சமஷ்டித் தீர்வை ஆராய்வதற்கு மாத்திரமே ஒப்புக்கொண்டனர்.

தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான எந்தவொரு தீர்வும், இன்னொரு இனப்படுகொலை நடக்காமல் இருப்பதற்கு முள்ளிவாய்க்கால் தமிழ் இனப்படுகொலையை மையமாகக் கொண்டதாக இருக்கவேண்டுமே ஒழிய ஒஸ்லோ அறிக்கையின் அடிப்படையில் அல்ல - என்றுள்ளது. (அ-ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யா - உக்ரைன் விவகாரம்:
# போர் நிறுத்தத்துக்கு அழைக்கின்றது சீனா

மொஸ்கோ, மே 25

ரஷ்யா - உக்ரைன் இடையில் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படுவதற்கான பேச்சுக்கு வருமாறு சீனா மற்றும் பிரேஸில் நாடுகள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன.

நேட்டோவில் இணைவதற்கு உக்ரைன் மேற்கொண்ட முன்னெடுப்புகளைத் தொடர்ந்து, உக்ரைனுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை அறிவித்தது ரஷ்யா. கடந்த இரண்டு ஆண்டுகாலமாக இடம்பெற்று வரும் இந்தப் போரில் உக்ரைனின் பல பகுதிகள் ரஷ்யாவால் கைப்பற்றப்பட்டுள்ளன.

ரஷ்ய ஆக்கிரமிப்புக்கு எதிராக உலகநாடுகள்பலவும் குரலெழுப்பி வருகின்றன. எனினும், ரஷ்யா மற்றும்சீனா இணைந்து தந்திரோபாய காய் நகர்த்தல்களையும் முன்னெடுத்துள்ளன. இவ்வாறானதொரு பின்னணியிலேயே ரஷ்யா - உக்ரைன் இடையில் போர் நிறுத்தம் ஏற்படுத்தப்படுவதற்கான பேச்சுக்கு வருமாறு சீனா மற்றும் பிரேஸில் நாடுகள் கூட்டாக அழைப்பு விடுத்துள்ளன.

சுவிற்ஸர்லாந்தில் அடுத்தமாதம் உக்ரைனின் அமைதிக்கான உச்சி மாநாடு நடைபெறவுள்ளது. ரஷ்யாவை அழைக்காமல் இந்த மாநாடு இடம்பெறுகின்றமைக்கு ரஷ்யா தனது எதிர்ப்பை ஏற்கனவே வலுவாகப் பதிவுசெய்துள்ளது. ரஷ்யாவின் கருத்துகளைக் கேட்காமல் மாநாட்டில் தீர்மானிக்கப்படும் எந்தவொரு முடிவையும் ஆதரிக்கப் போவதில்லை என்று ஏற்கனவே ரஷ்யத் தரப்பிலிருந்து திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டுள்ள பின்னணியில்தான், அமைதிப் பேச்சுக்கு சீனா அழைத்துள்ளது. (ம)



# ஜனநாயகத்தைப் பாதுகாக்க அணிதிரண்டு வாக்கிடுங்கள்
## புதுடில்லி விவசாயிகளை அழைக்கின்றார் சோனியா



புதுடில்லி, மே 25

இந்தியாவின் ஜனநாயகத்தையும், இறையாண்மையையும் பாதுகாப்பதற்காகப் புதுடில்லி விவசாயிகள் அணிதிரண்டு வாக்களிக்கவேண்டும் என்று காங்கிரஸின் பிரதானிகளில் ஒருவரான சோனியாகாந்தி வலியுறுத்தியுள்ளார்.

இந்திய மக்களவைத் தேர்தலின் 6ஆம் கட்ட வாக்குப் பதிவு இன்று நடைபெறுகிறது. இந்த நிலையிலேயே, வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ள சோனியாகாந்தி, ஜனநாயகத்தைப் பாதுகாக்க புதுடில்லி விவசாயிகள் ஓரணியில் திரளவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

"நாட்டில் ஜனநாயகம், அரசமைப்பு என்பவற்றைக் காப்பாற்ற இண்டியா கூட்டணி போராடி வருகிறது. அதற்கு நீங்கள் உங்களது பங்களிப்பை வழங்க வேண்டும். புதுடில்லியில் உள்ள ஏழு மக்களவைத் தொகுதியிலும் இண்டியா கூட்டணி வேட்பாளர்தான் வெற்றிபெறவேண்டும்" என்று அந்த வீடியோவில் சோனியாகாந்தி தெரிவித்துள்ளார். (ம)

# 310 தொகுதிகளில் வென்றதாம் பா.ஜ.க.
## அமித் ஷா தெரிவிப்பு



புதுடில்லி, மே 25

இந்திய மக்களவைத் தேர்தலில் இதுவரை வாக்குப் பதிவுகள் இடம்பெற்ற தொகுதிகளில் 310க்கும் மேற்பட்ட தொகுதிகளில் பா.ஜ.க. வெற்றிபெற்றுள்ளது என்று அமித் ஷா தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில், அவர் மேலும் உரையாற்றுகையில்;

முதல் ஐந்து கட்ட தேர்தல்கள் நிறைவடைந்துள்ளன. இவற்றில் இண்டியா கூட்டணி அதிக இடங்களில் வெற்றிபெற வாய்ப்பில்லை. காங்கிரஸ் கட்சிக்கு 40 இடங்கள் கூடக் கிடைக்காது. அகிலேஷ் யாதவுக்கு 4 இடங்கள் கூடக் கிடைக்காது. ஆனால், பா.ஜ.க. ஏற்கனவே 310 என்ற இலக்கைத் தாண்டிவிட்டது என்று அமித் ஷா தெரிவித்தார்.

இண்டியா கூட்டணியில் பிரதமர் வேட்பாளர் என யாரும் அறிவிக்கப்படவில்லை. இண்டியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் 5 பிரதமர்கள் உருவெடுப்பர். இவ்வாறான நிர்வாகத்தின்கீழ் நாடு சிறப்பாகச் செயற்படுமா? மோடியின் 3ஆவது ஆட்சியில், இந்தியா பொருளாதாரத்தில் மூன்றாவது பெரிய நாடாக மாறும் என்றும் அமித் ஷா மேலும் தெரிவித்துள்ளார். (ம)

# பாகிஸ்தானிலும் தனியார் மயம்!


இஸ்லாமபாத், மே 25

பொருளாதார நெருக்கடி வலுப்பெற்றுள்ள நிலையில், பொருளாதாரப் பிரச்சினைகளைச் சமாளிப்பதற்காக நஷ்டத்தில் இயங்கும் நிறுவனங்களைத் தனியார் மயமாக்கத் திட்டமிட்டுள்ளதாகப் பாகிஸ்தான் அறிவித்துள்ளது. (ம)

# அணுவாயுத ஏவுகணை வெற்றிகரச் சோதனை!

பரிஸ், மே 25

அணுவாயுதத்தை ஏந்திச்செல்லக்கூடிய ஏவுகணையை வெற்றிகரமாகச் சோதித்துள்ளதாகப் பிரான்ஸ் அறிவித்துள்ளது. இவ்வாறான ஏவுகணைச் சோதனையில் பிரான்ஸ் ஈடுபடுவது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது. (ம)



# ராபாவில் இஸ்ரேல் நேற்றுத் தாண்டவம்

காஸா, மே 25

காஸாவின் ராபா பகுதியில், இஸ்ரேல் நேற்றுமுன்தினம் இரவு தீவிரமான வான் தாக்குதல்களை நடத்தியுள்ளது. இந்தத் தாக்குதல்களில் 24 பேர் உயிரிழந்துள்ளனர்.

காஸாவில் மேற்கொள்ளப்பட்ட பரவலான இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து தற்போது எகிப்தின் எல்லையிலுள்ள ராபாவிலும் இஸ்ரேல் தீவிர இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. அமெரிக்காவினதும் இதர நேச நாடுகளினதும் எதிர்ப்பை மீறியே இந்த நடவடிக்கைகள் இஸ்ரேலால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், நேற்றுமுன்தினம் இரவு இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களில் 24 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அவர்களில் 16 பேர் குழந்தைகள் எனவும் பலஸ்தீனத் தொண்டு நிறுவனங்கள் அறிவித்துள்ளன. இஸ்ரேலின் இராணுவ நடவடிக்கையால் ராபாவில் இருந்து 8 இலட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# பலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் எண்ணம் இதுவரை இல்லை!
## ஆஸி. அறிவிப்பு

கான்பெரா, மே 25

பலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் எண்ணம் இதுவரை இல்லை என்று அவுஸ்திரேலிய அரசாங்கம் அறிவித்துள்ளது.

நோர்வே, அயர்லாந்து மற்றும் ஸ்பெய்ன் நாடுகள் பலஸ்தீனத்தை அங்கீகரிப்பதாக கடந்த இரண்டு நாள்களுக்கு முன்னர் கூட்டாக அறிவித்திருந்தன. "இஸ்ரேல், பலஸ்தீனம் என்ற இரு நாட்டுக் கொள்கையே காஸாவில் அமைதி ஏற்படுவதற்கான நிரந்தரத் தீர்வு" என்றும் அந்த நாடுகள் வலியுறுத்தியிருந்தன. இந்தத் தீர்மானத்துக்குக் கண்டனம் தெரிவித்துள்ள இஸ்ரேல், அந்த நாடுகளுக்கான தனது தூதுவர்களைத் திரும்பப் பெற்றது.


நோர்வே, அயர்லாந்து மற்றும் ஸ்பெய்ன் நாடுகளின் தீர்மானத்துக்கு அமெரிக்காவும் தன் எதிர்ப்பைப் பதிவு செய்ததுடன், இதைத் தன்னிச்சையான முடிவு என்றும் விமர்சித்திருந்தது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே பலஸ்தீனத்தை அங்கீகரிக்கும் எண்ணம் இல்லை என்று அவுஸ்திரேலியா அறிவித்துள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
10 • 09 • 1977

மறைவு
23 • 05 • 2024



## வல்லிபுரம் செந்தூர்ச்செல்வன்

**(கொடிகாமம் பொதுச்சந்தை வியாபாரி)**

மந்துவில் மேற்கு, கொடிகாமத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் செந்தூர்ச்செல்வன் அவர்கள் கடந்த (23.05.2024) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் வல்லிபுரம் - கணேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மகனும், வேலாயுதபிள்ளை சாரதாதேவி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெகதீஸ்வரியின் (ரஜனி) அன்புக் கணவரும், சதீஸ்குமார் (SLIIT UNI) (Software Engineer-கொழும்பு), சாம்பவி (வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி - மாணவி), சதுர்சன் (யா/மீசாலை வீரசிங்க மகா வித்தியாலயம் - மாணவன்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வசந்தமலர் (ஆசிரியர், யா/ கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாலயம்-கரவெட்டி), வதனி (கரவெட்டி), கோகிலா (கரவெட்டி), காலஞ்சென்ற நந்தன் (வரணி), கண்ணன் (மந்துவில்), நமணன் (MSO பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை - முல்லைத்தீவு), அம்பிகைசீலன் (ஆசிரியர், மட்/மமே/கொத்தியாப்புலை கலைவாணி மகா வித்தியாலயம் - மட்டக்களப்பு), சிந்துயா (முகாமைத்துவ உதவியாளர் கமநல அபிவிருத்தி திணைக்களம் - பம்பைமடு - வவுனியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், கெங்காதரன், ஜெயக்குமார், பவான், பிரதீபன் நந்தினி, இந்திரா, நிலுஜா, டயாநந்தினி ஆகியோரின் மைத்துனரும், தனுஸ்ரிகா, ஜனுஸ்ராகன், பிரசாந், லதுர்சன், தேஜஸ்வினி ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நிருசனா, ஜனனி, ஆதி, ஆஷா, தேனுஷன், அனுட்டிகா, கோஜனா, அக்ஷய், தருணிக்கா, பிரணிக்கா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் மந்துவில் மேற்கு கொடிகாமம் எனும் விலாசத்திலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக [illegible] மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கேலத்தம்ம[illegible] கோவில் வீதி,
மந்துவில் மேற்கு,
கொடிகாமம்.**

**தகவல்: குடும்பத்தினர்.
077 3344 314
077 8599 809**

(CR 42501) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உண்மை...

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது என ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நிர்மாணிக்கப்பட்ட மருத்துவ பயிற்சி மற்றும் ஆராய்ச்சித்துறை கட்டடத்தை நேற்று முற்பகல் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அங்கு உரையாற்றியதாகத் தெரிவித்து ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

"நான் அடிக்கடி யாழ். மாவட்டத்துக்கு வருகை தருவதாக இங்கு குறிப்பிடப்பட்டது. உண்மையில் நான் இந்த முறை இங்கு மருத்துவமனைகளைத் திறப்பதற்காக வந்தேன். நான் ஒரு நீண்ட வார இறுதி விடுமுறையில் வந்துள்ளேன். அதற்காக நான் உங்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்கிறேன். நான் கடந்தமுறை இங்கு வருகை தந்தபோது, நெதர்லாந்துத் தூதுவர் இந்த இரண்டு புதிய மருத்துவமனைகளைத் திறப்பதற்கு வருமாறு என்னிடம் கேட்டுக்கொண்டார். அதனால் இந்தவார இறுதியில் இங்கு வந்து இந்தச் செயற்பாடுகளை நிறைவு செய்யத் தீர்மானித்தேன்.

யாழ்ப்பாண மாவட்டம் நீண்டகாலமாக அபிவிருத்தியின் பலனை அனுபவிக்கவில்லை. வருமானம் போதியளவில் இல்லை. மக்கள் வேலை தேடும் நிலை காணப்படுகிறது. யாழ். மாவட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான அநேகமான சாத்தியங்கள் உள்ளன.

யாழ். மாவட்ட மக்களின் காணிப் பிரச்சினைகள் உள்ளிட்ட சில பிரச்சினைகளை எம்மால் தீர்க்கமுடிந்துள்ளது. தடுப்புக் காவலில் உள்ள கைதிகள் தொடர்பில் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அது தொடர்பான பிரச்சினைகளும் உள்ளன. எங்களால் இன்னும் இதனை முடிவுக்குக் கொண்டுவர முடியவில்லை. அதற்கான தீர்வுகள் தற்போதுள்ள அரசியல் பிரச்சினைகளைச் சுற்றியே உள்ளன.

நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புதல், காணாமல் போனோர் விவகாரம், இழப்பீடுகள், உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக நாம் பல நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இந்தப் பிரச்சினைகள் அனைத்தையும் தீர்க்க இதுவே நேரம் என்று நான் நம்புகிறேன். அதற்கு அனைவரும் ஒத்துழைப்பார்கள் என்று நம்புகிறேன். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சித்து வருவதோடு, வடக்கு - கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அதற்கான நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடியுள்ளேன்.

முன்னைய ஆணைக்குழு அறிக்கைகள் அனைத்தையும் ஆராய்ந்து தொகுக்கப்பட்ட நவாஸ் ஆணைக்குழுவின் அறிக்கை அண்மமையில் எமக்குக் கிடைத்தது. இந்த அனைத்து ஆணைக்குழு அறிக்கைகளின் தாய் அறிக்கையாகவும், இது தொடர்பான கடைசி ஆணைக்குழு அறிக்கையும் அதுவாகவே இருக்கும் என்று நான் நினைக்கிறேன். இதற்காக மற்றுமொரு ஆணைக்குழுவின் அவசியம் இல்லை.

காணாமல் போனோர் அலுவலகம் மாற்றங்களுக்கு உள்ளாகவேண்டும் என்ற அவர்களின் பரிந்துரையை நான் ஏற்றுக்கொள்கிறேன். அதை அப்படியே செய்யவேண்டும். காணாமல் போனோர் அலுவலகம் மற்றும் இழப்பீடுகள் தொடர்பான முழுப் பிரச்சினைக்கான தீர்வுகளிலும் மாற்றங்கள் செய்வதற்காக அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

பொருளாதார நெருக்கடியால், கடந்த இரண்டு ஆண்டுகளாக, எங்களால் அதிகளவு இழப்பீட்டுத் தொகையைச் செலுத்த முடியவில்லை. அதற்காக பணம் ஒதுக்க வேண்டும். அத்துடன் எது உண்மை, என்ன நடந்தது, நல்லிணக்கத்துக்காக நாம் என்ன செய்கிறோம் என்ற கேள்விக்குறி காணப்படுகிறது. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது. ஆனால் நீதிமன்ற அதிகாரம் குறித்த பிரச்சினைகள் அதற்குள் காணப்படுகின்றன.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவால் நடைமுறைப்படுத்தப்படும் நீதித்துறை அதிகாரங்கள் எமக்கு இருக்க வேண்டுமா அல்லது அந்த ஆணைக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் நீதித்துறை அதிகாரங்களைச் செயற்படுத்தும் தனி நீதிமன்றம் வேண்டுமா என்பதை நாம் தீர்மானிக்கவேண்டும். மேலும் இந்தச் சட்ட வரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவேண்டும். இது குறித்து அரசாங்கம் முடிவெடுக்க வேண்டும்.

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவை சட்டமாக்குவதற்கு எமக்கு ஆதரவளித்த மூன்று தூதுவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அனைத்துத் தரப்பினருடனும் கலந்துரையாடித் தீர்மானம் எடுக்குமாறு இரண்டு அமைச்சர்களுக்கும் அறிவித்துள்ளேன்.

இதன்மூலம் பல பிரச்சினைகள் தீரும் என நம்புகிறேன். எனவே, இதுபற்றி கலந்துரையாடி, சாத்தியமான தீர்வுகளுடன் இணக்கப்பாட்டுக்கு வருவோம் என்று அமைச்சர்களிடம் தெரிவித்தேன்.

அத்துடன், வட மாகாணம் அபிவிருத்திக்காக சாத்தியக்கூறுகளை அதிகமாகக் கொண்டிருக்கிறது. இந்த மாகாணத்தில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி பெருமளவில் உள்ளது. அதனால் யாழ்ப்பாணத்தை இலங்கையின் முக்கியமான வலுசக்தி மையமாக கட்டியெழுப்பமுடியும். வட மாகாணத்தில் இந்த வலுசக்தியை நாம் இதுவரை பயன்படுத்தவில்லை. ஆனாலும் ஜிகாவாட்ஸ் அளவிலான வலுசக்தி இங்கு உள்ளது.

மேலும், நாட்டில் போட்டி, ஏற்றுமதி விவசாயத்தை உருவாக்க எதிர்பார்க்கிறோம். வடக்கு மாகாணம் அதற்குள் முக்கியமான இடத்தைப் பிடிக்கிறது. இங்குள்ள விவசாயிகளுக்கு அதற்கான திறன் உள்ளது. இதன்மூலம் வடமாகாண மக்களின் வருமான மட்டத்தை மிகப்பெரியளவில் மேம்படுத்தமுடியும்.

மேலும், கைத்தொழில்களைப் பொறுத்தவரையில் காங்கேசன்துறையில் முதலாவது முதலீட்டு வலயத்தை அமைப்பது குறித்தும், பின்னர் பரந்தன் மற்றும் மாங்குளத்தில் கைத்தொழில் பேட்டைகளை ஆரம்பிப்பது குறித்தும் ஆலோசித்து வருகிறோம்.

திருகோணமலையை அபிவிருத்தி செய்வதற்கு இந்தியாவுடன் இணைந்து செயற்படுகின்றோம். வடக்கில் சுற்றுலாத்துறைக்கான சாத்தியக்கூறுகள் குறித்தும் ஆராய்ந்து வருகிறோம். எதிர்வரும் காலங்களில் ஏற்படவுள்ள தரைமார்க்கத் தொடர்பின் மூலம் யாழ்ப்பாணம் உள்ளடங்கலாக முழு வடக்கு மாகாணமும் புரட்சிகரமாக மாறும். இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் வடமாகாணத்தை இலங்கையின் பிரதான பொருளாதார மையமாக அபிவிருத்தி செய்ய முடியும்" இவ்வாறு ஜனாதிபதி ரணில் தெரித்தார் என்று அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது. (அ-ஒ-5-125-26)

## யாழ்...

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி, யாழ். மாவட்டத்துக்கு தேசிய மருத்துவமனையை வழங்குமாறு நீங்கள் அனைவரும் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்தீர்கள். கராப்பிட்டிய மருத்துவமனையை தேசிய மருத்துவமனையாகத் தரமுயர்த்துவதற்கு கடந்தவாரம் அமைச்சரவையில் அனுமதி வழங்கினோம். அத்துடன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையை அடுத்த தேசிய மருத்துவமனையாக மாற்றுவதற்கும் நாம் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். யாழ்ப்பாண மாவட்டத்தில் உயர்தர சுகாதாரச் சேவையை உறுதிப்படுத்தவேண்டிய தேவை உள்ளது. அப்போது கொழும்பில் மாத்திரமன்றி தெற்கு, வடக்கு, மற்றும் மத்திய மாகாணங்களிலும் சிறந்ததொரு மருத்துவமனைக் கட்டமைப்பு ஏற்படுத்தப்படும் - என்றார். (அ-ஒ-5-125-26)

## ஊடகவியலாளர்களை..

இதனால், பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அங்கு வருகை தந்த வேளை, 'பலாலி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஒரு கொலைகாரன், பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஒழிக' என போராட்டக்காரர்கள் கூச்சலிட்டனர். (அ-ஒ-27)

# மரண அறிவித்தல்

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ



தோற்றம்
31.01.1946

மறைவு
21.05.2024

லயன் சீமாட்டி

## திருமதி இலட்சுமிகாந்தன் தங்கமணி

கலைமணி வீதி, கட்டப்பிராயைச் சேர்ந்த லயன் சீமாட்டி திருமதி இலட்சுமிகாந்தன் தங்கமணி அவர்கள் கடந்த (21.05.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி எய்திவிட்டார்.

அன்னார் கட்டப்பிராயைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை (நேரக் கணிப்பாளர் யா.இ.போ.ச) இராசம்மா தம்பதியரின் ஏக புத்திரியும், திருநெல்வேலியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - கனகம்மா தம்பதியரின் ஆசை மருமகளும், லயன் இலட்சுமிகாந்தனின் (ஓய்வு நிலை கிராமசேவையாளர், தலைவர் கட்டப்பிராய் முத்துமாரி அம்மன் ஆலயம், கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலையம், செம்மணி இந்து மயானம், இருபாலை தெற்கு முதியோர் சங்கம்) அன்பு மனைவியும், சுரேந்திரன் (பொறியியலாளர் - கனடா), அமிழ்தினி (லண்டன்), கார்த்திகா (அபிவிருத்தி உத்தியோகத்தர், கமநல சேவை நிலையம் - உரும்பிராய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், கௌஷிகா (கனடா), விமல்ராஜ் (லண்டன்), கோபிவதனன் (சாரங்கன் மல்ரி சென்ரர் - யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிஷோபென், விரோஷன், டிஷானா (கனடா), காவியா, ஓவியா (லண்டன்), சாரங்கன் (யாழ் இந்துக் கல்லூரி மாணவன்), தீபனா (யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற சண்முகானந்தம் (ஓய்வு நிலை சாலை முகாமையாளர் இ.போ.ச, கனடா), பரமானந்தம் (அமெரிக்கா), ஈஸ்வரானந்தம் (கனடா), நவநீதராசா (ஜேர்மன்), ரவீந்திரகுமார் (டென்மார்க்), ஸ்ரீகாந்தன் (சுவிஸ்), ஜெயராஜா (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வேந்திரகுமாரி (கனடா), ஸ்ரீதயா (அமெரிக்கா), நவறஞ்சினி (கனடா), ஜெயசோதி (ஜேர்மன்), காலஞ்சென்ற நளினி (டென்மார்க்), யோகா (சுவிஸ்), நளாயினி (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (26.05.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காலை 9.30 மணியளவில் செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிநிற்கின்றோம்.

கலைமணி வீதி,
கட்டப்பிராய், யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 809 6181

(CS/55154) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஸ்டம்
தொழில்நுட்பக் கல்லூரி

இல. 63, சிவன் வடக்கு வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

தொழில் நுட்பப் பிரிவில் ஒவ்வொரு வருடமும் தேசியமாவட்ட முதல் நிலை சாதனையாளர்களை உருவாக்கிவருகின்ற அதே ஆசிரியர்களின் வழிகாட்டலில்

**புதிய பிரிவு ஆரம்பம்**
**A/L 2026 தொழினுட்பப் பிரிவு**

ஆரம்பம் : 01.06.2024 சனிக்கிழமை
நேரம் : மாலை : 3.30 மணிக்கு

- பொறியியல் தொழினுட்பவியல்
- உயிர்முறைமைகள் தொழினுட்பவியல்
- தொழினுட்பவியலுக்கான விஞ்ஞானம்
- ICT, கணிதம் (7). விவசாய விஞ்ஞானம்
- புவியியல். ஊடகக்கல்வி

தொடர்புகளுக்கு:
077 248 7774
076 552 9093
021 221 7860

(cr.42498) (N-1)

## EDUS 077 488 7774

www.edustutor.com

**G.C.E A/L 2026**

கணித விஞ்ஞான பிரிவு மாணவர்களுக்கான புதிய ஒன்லைன் வகுப்புக்கள் ஆரம்பம்..!

COM.MATHS | BIOLOGY | PHYSICS | CHEMISTRY | ICT

Tamil & English Medium

Quality learning | Guaranteed Results | Professional Service

ஒன்லைன் கற்பித்தலில் இலங்கையின் முன்னணி ஆசிரியர்களுடன் உங்கள் சாதனைப் பயணத்தை ஆரம்பித்திடுங்கள்..!

(cs.551717)

## முழு நேர/ பகுதி நேர வேலைவாய்ப்பு

யாழ் நகரில் இயங்கி வரும் தனியார் கல்வி நிறுவனத்திற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

- எழுதுவினைஞர் (Clerk) பெண்
- தமிழ் தட்டெழுத்தாளர் (Typist)
- தகமை A/L படித்திருத்தல் வேண்டும்

ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

நிர்வாகி

மேலதிக தகவல்களுக்கு 077 248 7774

(CR/42497) J-1

## மொழிபெயர்ப்பாளர் தேவை

- சிங்களத்தில் இருந்து தமிழுக்கும்
- ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கும்


மொழிபெயர்க்கக்கூடிய ஆற்றலுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

முழுநேரம் :- அலுவலகத்தில் பணி
பகுதிநேரம் :- வீட்டிலிருந்தும் பணி புரியலாம்

077 120 9998 mmslanka@gmail.com

## விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட **Greaves MK12, MK 20 நீர் இறைக்கும் இயந்திரம் (Water Pump)** இப்பொழுது எம்மிடம். அத்துடன் இலங்கையில் முதன் முதலாக அறிமுகப்படுத்துகின்றோம். ஒரே என்ஜினிற்கு விரும்பிய எரிபொருளை நீங்களே தெரிவு செய்யலாம். (மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல்)



"எம்மவரின் தெரிவு எமக்கே தெரியும்"

**ஆர்க் .என். கம்பனி**

- 150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
- A9 வீதி, எழுதுமட்டுவாள். 070 191 3571
- A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன் 021 228 2020

Hotline: 071 535 7799 / 071 973 9917

(cs.55174) (N-1)

## வேலையாட்கள் தேவை

திஸ்ஸமகாராமவில் இயங்கும் பண்ணை (பாம்) ஒன்றில் வேலை செய்வதற்கு குடும்பமாக (கணவன், மனை வியாக) இருவரும் தங்கி நின்று வேலை செய்வதற்கு தேவை.

- ✓ சம்பளம் 75,000இற்கு மேல் (ஆண்-40000 /=. பெண்- 36000/-)
- ✓ வயது : 50 வயதிற்குட்பட்டவர்கள்.
- ✓ தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படும்.
- ✓ பயிர்ச்செய்கை மற்றும் கோழி வளர்ப்பில் அனுபவம் தேவை.
- ✓ இரு மாதங்களுக்கு ஒரு தடவை விடுமுறை வழங்கப்படும் (ஐந்து நாட்கள்)

தொடர்புகளுக்கு: 074 035 2275

## வங்கி மீதி வசதிகள் மற்றும் விசா ஆலோசனை

சகல நாடுகளுக்குமான விசா ஆலோசனை மற்றும் வங்கி மீதி (Show Money) வசதிகள்

தொடர்புகளுக்கு: (CS/55110) J-1

074 173 7684

## Win Repair

உங்கள் குளிர்சாதனப் பெட்டி, சலவை இயந்திரம், A/C ஆகியன பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள் உங்கள் இடத்திற்கே வந்து திருத்தித் தருகிறோம்.

தொடர்பு:- 076 906 4682

(CS/573) J-1

## விற்பனைக்கு

2" China பட்டறையுடன் தச்சு வேலைக்கான அனைத்து உபகரணங்களும் விற்பனைக்கு உள்ளன.

விலை - 400000/-

077 241 4588

(CS/55165) J-1

## காணி விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் வடக்கு (G.G பொன்னம்பலம் வீதி) பலாலி வீதியில் இருந்து 200m தூரத்தில் 3வது காணி **27 பரப்பு தோட்டக் காணி 5 அறை வீட்டு அத்திபாரத்துடன் விற்பனைக்கு உண்டு.**

**தரகர் தேவை இல்லை.**

தொடர்பு:- 076 877 5021

(CS 570) A-1

# மரண அறிவித்தல்

## சரவணமுத்து தவகுணராஜசிங்கம்

(ஓய்வுபெற்ற விரிவுரையாளரும், சட்டத்தரணியும், சமாதான நீதவானும்)

தோற்றம் 25.10.1947 — மறைவு 15.05.2024



சுழிபுரம் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து தவகுணராஜசிங்கம் கடந்த (18.05.2024) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - அன்னப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான சற்குருநாதன் - சந்திராதேவி தம்பதியரின் மருமகனும், ராஜகுமாரியின் பாசமிகு கணவரும், சரவணராஜன் (UK), விஜயலட்சுமி (ஜேர்மனி), பாலகணேஸ்வரி (German - BA) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சியாமளா, முருகானந்தன், ஜனகன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சருஜன், சாதனா, விஜிதரன், கஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான கதிராசிப்பிள்ளை, சிவராசா (SK), தனபூமாதேவி மற்றும் கனகதேவி (கனடா), செல்வலஷ்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (26.05.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சுழிபுரம் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர்
076 986 7877
077 756 6895

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம்.

(CS/55150) J-1



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.05. 2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org